மேனிலை இரண்டாம் வகுப்பு

வணிகவியல்

அரசு மாதிரி வினாத்தாள் - 1

விடை குறிப்புகள்

பகுதி - அ

சரியானவிடை

1. ஆ. திறமை	11. அ. 90 நாட்கள்
2. ஆ. இந்துக் கூட்டுக் குடும்பம்	12. 15 மாதங்களுக்கு மேல் செல்லக் கூடாது
3. இ. துறைமுறை அமைப்பு	13. ஆ. 15
4. அ. வில்லியம் பேசட்	14. அ. நிகர இலாபத்தில் 11 விழுக்காடு
5. அ. வியாபார இரகசியங்களைக் காக்க இயலும்	15. இ. நிதிப் பத்திரங்கள்
6. இ. ஒரு நபர் மட்டும் தேவை	16. ஆ. கரடி
7. ஆ. வரையறா பொறுப்பு	17. ஆ. கழிவு முகவர்கள்
8. அ. முதல்வர் மற்றும் முகவர்	18. இ. இராபர்ட் ஓவன்
9. அ. பூரண நல்ல நம்பிக்கை	19. ஈ. 25
10. இ. ரூ. 5,000	20. அ. 51%

பகுதி - ஆ

21. **வியாபாரத்தின் முக்கியப் பணிகள் யாவை?**

வியாபாரத்தின் முக்கிய பணிகள் பின்வருமாறு:

1. உற்பத்திப் பணி 2. சந்தையிடுதல் பணி 3. நிதியளிப்பு பணி
4. பணியாளர் பணி 5. கொள்முதல் பணி 6. மக்கள் தொடர்பு பணி
7. சட்டமுறை பணி

22. **கூட்டுருவாக்கம் பெறாத அமைப்புகளின் வகைகள் யாவை ?**

1. தனியாள் வணிகம், 2. கூட்டாண்மை, 3. இந்துக் கூட்டுக் குடும்பம்.

23. **வரையறா பொறுப்பு என்றால் என்ன ?**

- வியாபாரக் கடன்களைச் செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லாவிடில், தன் சொந்த சொத்துக்களிலிருந்து கடனீந்தோர்க்கு செலுத்த வேண்டும்.
- கடனீந்தோர் உரிமையாளரின் சொத்துகளை பறிமுதல் செய்ய உரிமையுண்டு.

24. **கூட்டாண்மை வரைவிலக்கணம் தருக.**

- இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932 பிரிவு 4 இன் படி, எல்லோரும் சேர்ந்தோ, எல்லோருக்காக ஒருவரோ நடத்தும் தொழிலின் இலாபத்தை பகிர்ந்து கொள்ள ஒப்புக்கொண்டவர்களிடையே நிலவும் உறவு ஆகும்.

25. **கூட்டாண்மை கலைப்பிற்கும், கூட்டாண்மை நிறுவனக் கலைப்பிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ? (ஏதேனும் இரண்டு)**

வ. எண்	கூட்டாண்மைக் கலைப்பு	நிறுவனக் கலைப்பு
1	ஒருவர் அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட கூட்டாளிகள் தங்களுக்குள் உள்ள உறவை முறித்துக் கொள்வதாகும்.	அனைத்துக் கூட்டாளிகளும் தங்களுக்குள் உள்ள உறவை முறித்துக் கொள்வதாகும்.
2	தொழிலை முடிவுக்குக் கொண்டு வரலாம் அல்லது தொடர்ந்து நடத்தலாம்.	தொழிலை முடிவுக்குக் கொண்டுவந்து விடும்.
3	கலைப்பிற்குப் பிறகும் தொழில் தொடர்ந்து நடைபெறும்.	கலைப்பிற்குப் பிறகு தொழிலை தொடர்ந்து நடத்த இயலாது.
4	கூட்டாண்மைக் கலைப்பினால், நிறுவன கலைப்பு ஏற்படுவது இல்லை.	நிறுவன கலைப்பினால், கட்டாயம் கூட்டாண்மை கலைப்பு ஏற்படும்.

26. **குறுமப் பங்கொப்பம் பெறவில்லையெனில், என்ன விளைவு ஏற்படும்?**

தகவலறிக்கை வெளியிட்ட 90 நாட்களுக்குள் குறந்தளவு பங்கெடுப்பு பெறவில்லையெனில்,

i) விண்ணப்பத்தின்மீது பெற்ற பணம் முழுவதும் திருப்பித் தருதல் வேண்டும்.
ii) பங்குகளை ஒதுக்கீடு செய்யக்கூடாது.

27. **அயல்நாட்டு நிறுமம் என்பதன் பொருள் யாது ?**

- வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்டு இந்தியாவில் தொழிலிடம் உள்ள நிறுமம் அயல் நாட்டு நிறுமம் எனப்படும்.
- இந்தியாவின் சட்டங்கள் அவற்றிற்கு பொருந்தும்.

28. **பகராள் என்றால் என்ன ?**

- ஒரு பொதுக் கூட்டத்தில் தனக்கு பதில் கலந்து கொள்ள உறுப்பினரால் நியமிக்கப்படும் ஒரு நபரைக் குறிப்பதே பகராள் எனப்படும்.
- பகராளை நியமிக்கும் ஆணைப் பத்திரமும் பகராள் எனும் சொல் குறிக்கும்.

29. **ஊக வணிகர்கள் என்பவர் யார்?**

- எதிர்காலத்தில் இலாபத்துடன் விற்கும் நோக்குடன் பத்திரங்களைத் தற்போது வாங்குபவர்களை ஊக வணிகர்கள் என்று அழைக்கிறோம்.
- இவர்கள் தாம் வாங்கிய பத்திரங்களை நீண்ட காலம் வரை வைத்திருக்க மாட்டார்கள்.
- பத்திரங்களை வாங்கும்போதே அவற்றை விற்கும் எண்ணத்தில்தான் வாங்குவார்கள்.
- இவர்கள் உண்மையான முதலீட்டாளர்கள் அல்ல.

30. **இராணுவம் சார்ந்த தொழில்களுக்கு துறைசார்ந்த அமைப்பே சிறந்தது என எதனால் கூறப்படுகிறது ?**

- துறைவாரி அமைப்புகளில் கொள்கைகள் மற்றும் செயல்பாடுகள் பற்றிய இரகசியங்களை பாதுகாக்க இயலும்.
- துறைவாரி அமைப்பிற்கு தேவைப்படும் நிதியை, அரசு முழுவதுமாக வழங்குகிறது.

பகுதி - இ

31. **எந்தக் காரணங்களுக்காக அமைப்பைப் பற்றி படிப்பது முக்கியத்துவம் வாய்ந்தது என விவரி?**

- அமைப்பைப் பற்றி கீழ்காணும் காரணங்களுக்காக தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகிறது.

1. ஓர் அமைப்பு என்பது மனித வாழ்வில் அனைத்து முக்கிய தருணங்களிலும் பரவியுள்ளது.
   - ஒரு மனிதனின் பிறப்பு மருத்துவமனை என்னும் அமைப்பில் நிகழ்கிறது.
   - அவனுடைய கல்வி, பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் என்னும் அமைப்புகள்மூலம் கிடைக்கிறது.
   - அவனது பணி அலுவலகம் தொழிற்கூடம் மற்றும் வியாபாரம் என்னும் அமைப்புகள் மூலம் நடைபெறுகிறது.
2. ஒரு மேலாளருக்கு அமைப்பை பற்றிய அறிவு, பணியைத் திறம்பட செயல்படுத்த உதவுகிறது.
3. ஒரு அமைப்பு என்பது, திருப்தியளிக்கும் வகையில் இருக்க வேண்டும். மேலும் சிலநேரங்களில் இது சரியாக அமையவில்லையெனில் அது ஏமாற்றத்தை அளிக்கக்கூடும்.

32. **கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்யாமையின் குறைபாடுகள் யாவை ?**

(ஏதேனும் மூன்று எழுதவும்)

1. நிறுவனத்திற்கு எதிராகவோ, கூட்டாளிகளுக்கு எதிராகவோ மூன்றாவது நபர் எவரும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.
2. கூட்டாளிகளை எதிர்த்து நிறுவனம் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது.
3. மூன்றாவது நபர் மீது, தனக்கு சேரவேண்டிய பாக்கிப் பணத்தைப்பெற நிறுவனம் வழக்குத் தொடுக்க முடியாது.
4. நிறுவனத்தின் வியாபாரக் குறிகள், பதிப்புரிமைகளை வெளியாட்கள் பயன்படுத்தக் கூடாது என தடுக்க முடியாது
5. பதிவு செய்யா நிறுவனம், மூன்றாம் நபருக்கு எதிராக தொகை ரூ.100க்கு மேல் திரும்பப் பெற, அதனுடைய உரிமையை செயல்படுத்த இயலாது.

33. **அரசு நிறுமம் - விளக்குக.**

- இந்திய நிறுமச்சட்டம் 1956-ன் படி, அரசு நிறுமம் என்பது மைய அரசு அல்லது மாநில அரசுகள் தனித்தனியாகவோ, கூட்டாகவோ ஒரு நிறுமத்தின் பங்கு முதலில் குறைந்தபட்சம் 51 விழுக்காட்டைக் கொண்டிருந்தால் அது அரசு நிறுமமாகும். (எ.கா.) பெல், செய்ல்

34. **மேலாண்மை ஊதியம் - குறிப்புத் தருக.**

- மேலாண்மை ஊதியம் என்பது, மாதம் தோறும் செலுத்தத் தக்கதாகவோ, நிகர இலாபத்தில் குறிப்பிட்ட விழுக்காடு என்றோ, கழிவு அடிப்படையிலோ எப்படியும் இருக்கலாம்.
- மேலாண்மையர்க்கு, நிறுமம் செய்து கொடுக்கும் வசதிகளின் மதிப்பும் இதில் அடங்கும்.
- குறிப்பிட்டஎந்த ஆண்டிலும் ஒரு பொது வரையறு நிறுமம் கொடுக்கக் கூடிய ஒட்டுமொத்த மேலாண்மை ஊதியம் அதன் நிகர இலாபத்தில் 11 விழுக்காட்டிற்கு மிகக் கூடாது.
- ஒரு மேலாண்மை இயக்குநரின் ஊதியம் நிகர இலாபத்தில் 5 விழுக்காட்டிற்கு மிகுதியாக இருக்கக் கூடாது.
- இயக்குநர்கள் ஒருவருக்கு மேற்பட்டவர் இருப்பின், அனைவருக்கும் சேர்த்து நிகர இலாபத்தில் 10 சதவிகிதத்திற்குக் கூடுதலாக இருக்கக் கூடாது.
- ஓராண்டில் இலாபம் இல்லையெனிலோ, போதிய இலாபம் இல்லையெனிலோ நிறுமங்கள் சட்டத்தில் கூறியுள்ளவாறு குறைந்தளவு ஊதியம் கொடுக்கப்படலாம்.

35. **இயக்குநர் ஒருவரை நீக்கிவிடும் சூழ்நிலைகள் யாவை?**

- பதவிக் காலம் முடியும் முன்னரே இயக்குநர் ஒருவர், மோசடி நோக்கில் செயல்பட்டிருந்தாலோ, தனது பொறுப்பாண்மை நிலைக்குக் குந்தகம் ஏற்படுமாறு நிறும நலனை ஒதுக்கிவிட்டுச் சொந்த ஆதாயத்துக்காகச் செயல்பட்டிருந்தாலொ, சாதாரணத் தீர்மானம் நிறைவேற்றிப் பதவியிலிருந்து நீக்கிவிடலாம்.
- சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மைய அரசு இயக்குநர் ஒருவரை பதவியினின்றும் நீக்கலாம்.
- நிறுமச் செயல்பாடுகளில், பங்குநர்களைக் கொடுமைப்படுத்தும் வகையிலும், நிர்வாகம் சீர்கேடு அடையும் வகையிலும் செயல்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டு விண்ணப்பித்திருப்பின், அதனடிப்படையில் நிறுமச் சட்டத் தீர்ப்பாயம் ஒருவரை இயக்குநர் பதவியிலிருந்து நீக்க முடியும்.

36. **பரஸ்பர நிதியகம் - விளக்குக.**

- பரஸ்பர நிதிகள், சிறு முதலீட்டாளர்களின் சேமிப்பைத் திரட்டி, அவற்றை அரசு மற்றும் பிற நிறுமங்களின் பத்திரங்களில் முதலீடு செய்து, மூலதன ஆதாயம் பெறுவதுடன், வட்டி மற்றும் பங்காதாயத்தையும் பெறுகிறது.
- ‘சிறுதுளி பெருவெள்ளம்’ என்ற கோட்பாட்டின்படிஇவை செயல்படுகின்றன.
- முதலீட்டாளர்களிடமிருந்து பணம் பெறுவதற்கு, பரஸ்பர நிதிகள் எளிய முறையைக்கடைப்பிடிக்கின்றன.
- நிதியின் முதல், சம மதிப்புள்ள சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அலகுகள் எனப்படுகின்றன.
- முதலீட்டாளர் ஒவ்வொருவரும் அவரவர் மூலதனத்திற்கு ஏற்ப அலகுகள் ஒதுக்கப்படுகின்றன.

37. **கூட்டுறவு சிறப்பங்காடியின் பொருள் தருக? அதன் சிறப்பில்புகளைத் தருக.**

(ஏதேனும் ஐந்து)

<u>பொருள்:</u>

- இந்தப் பதம், அடிப்படையில் இந்தியாவில் பயன்படுத்தப் படுவதாகும்.
- ஆனால், இது ஆங்கிலத்தில் தோற்றம் பெற்ற பெயர் சிறப்பங்காடிகள் ஆகும்.
- இது பேரளவில் நடத்தப்படும் சில்லரை வியாபார அமைப்பாகும்.
- நாள்தோறும் பயன்படுத்தப்படும் வீட்டுப் பொருட்கள் பல துறைகளில் விற்பாண்மையர் உதவியின்றி விற்கப்படுகிறது.
- இது பொதுவாக நிறுமத்தைப் போன்று இலாப நோக்குடன் அமைக்கப்படுவது.
- இது மாநகரங்களிலும், பெருநகரங்களிலும் வழக்கமாகத் தொடங்கப்படும்.

<u>சிறப்பியல்புகள்:</u>

1. பேரளவு சில்லறை விற்பனை செய்யும் அமைப்பு
2. பலவகையான பொருட்கள் கிடைக்குமிடம்
3. சுய சேவைப் பிரிவு முறையில் நடத்தப்படுகிறது.
4. சுய சேவைப்பிரிவில் விற்பாண்மையர் தேவை ஏற்படுவதில்லை.
5. இதன் தோற்றம், பல துறைகளைக் கொண்டதாகும்.
6. ரொக்க விற்பனை அடிப்படையில் வியாபாரம் செய்யப்படும்.
7. பொருட்கள் சுத்தம் செய்யப்பட்டு, பல கட்டுமங்களில் விற்கப்படுகின்றன.
8. பொருட்களில் கலப்படம் தவிர்க்கப்படுகிறது.

38. **பொதுத் துறைக்கும் தனியார் துறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?** (மூன்று)

வ.எண்	தலைப்பு	பொதுத் துறை	தனியார் துறை
1	நோக்கம்	சேவை செய்வது	இலாபம் ஈட்டுவது
2	நிதி	வரையறா நிதி, மக்களின் சேமிப்பை திரட்ட முடியும்	வரையறுத்த நிதி, மக்களின் சேமிப்பை திரட்ட முடியாது
3	பொருளாதார செறிவு	தடுக்கப்படுகிறது	தூண்டப்படுகிறது
4	தொழில் தன்மை	தனியார் துறையால் புறக்கணிக்கப்பட்ட தொழில்கள் ஏற்று நடத்தப்படுகிறது	அபாயம் இல்லாத, இலாபம் அதிகம் உள்ள தொழில்கள் ஏற்று நடத்தப்படுகிறது
5	நாட்டின் வளங்கள்	பாதுகாக்கப்படுகிறது	சுரண்டப்படுகிறது
6	செயல்படும் துறைகள்	இராணுவம் சார்ந்த மற்றும் அடிப்படைத் தொழில்கள்	விவசாயம், நுகர்பொருட்கள் போன்ற துறைகள்
7	வேலை வாய்ப்பு	பெருமளவில் உள்ளது	குறைந்த அளவில் உள்ளது
8	மேலாண்மை	அரசு அலுவலர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது	தனிநபரால் மேலாண்மை செய்யப்படுகிறது

39. **துறைவாரி அமைப்பின் இயல்புகளை விவரி.** (ஏதேனும் மூன்று)

1. துறைவாரி அமைப்புகள் தமக்குத் தேவைப்படும் நிதியைப் பெறுவதற்கு முழுவதுமாக அரசைச் சார்ந்திருக்கின்றன.
2. அதிகார ஒப்படைவு, அரசு உயர் நிறைவேற்றாளர்களிடமிருந்து அமைப்பின் ஒவ்வொரு பகுதிக்கும், கீழ் நோக்கி செல்கிறது. இது நிறைவேற்றாளர்களிடையே செங்குத்து அதிகார உறவை ஏற்படுத்துகிறது.
3. இந்நிறுவனங்களின் வரவு-செலவுத் திட்டம், அரசின் கணக்குப் பதிவு முறை மற்றும் தணிக்கைக்கு உட்பட்டதாகும். கணக்குப் பதிவியல் மற்றும் தணிக்கைக் கட்டுப்பாடு முறைகள் அரசு துறைகளில் பின்பற்றுவதைப்போல் இதற்கும் பின்பற்றப்படும்.
4. இத் தொழிலமைப்புகள் அரசு துறைகளின் பகுதிகளாக இயங்குவதால் அரசுக்குரிய சட்ட விலக்களிப்பு பெற்று விளங்குகின்றன. அரசின் இசைவின்றி, இந்நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்க இயலாது.

40. **ஊக வணிகர்களின் வகைகளில் இரண்டினை விவரி.**

<u>காளை:</u>

1. பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேறும் என்று எதிர்பார்ப்பவர்.
2. எல்லாம் நன்மையாகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர்.
3. இவர் தெஜீவாலா என அழைக்கப்படுகிறார்.

<u>கரடி :</u>

1. பத்திரங்கள் எதிர்காலத்தில் விலை குறையும் என்று எதிர்பார்ப்பவர்.
2. எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.
3. இவர் மண்டிவிலா என அழைக்கப்படுகிறார்.

<u>கலைமான் :</u>

1. முன்னெச்சரிக்கை உடையவர்.
2. பங்குகள் முனைமத்தில் விற்கக்கப்படும் என அறிந்தவுடன் புதிய வெளியீடுகளுக்கு விண்ணப்பம் செய்வர்.
3. இவர் முனைம வேட்டையாளர் என அழைக்கப்படுகிறார்.

<u>பகுதி - ஈ</u>

41. அ) **பன்னாட்டு நிறுமங்கள் பற்றி நீவீர் அறிவது யாது? அதன் சிறப்பியல்புகள் பற்றி எழுதுக.**

- <u>பன்னாட்டு நிறுமங்கள் :</u>
  1. பன்னாடு = பல + நாடு   என்ற இரண்டு பதங்களைக் கொண்டது.
  2. பல நாடுகளில் இயங்கிவரும் நிறுமமாகும்.
  3. இவ்வகை நிறுமங்களுக்கு தொழிற்சாலைகளும், அலுவலகக் கிளைகளும் பல நாடுகளில் இருக்கும்.
  4. உலக வியாபாரம் அல்லது பன்னாட்டு வியாபாரம் என அழைக்கப்படுகிறது.
  5. ஒரு நாட்டு அரசின் எல்லையைத் தாண்டி செல்லும் வியாபாரம் ஆகும்.
- <u>பன்னாட்டு நிறுமங்கள் எடுத்துக்காட்டுகள் :</u>
  1. யூனி லீவர் லிமிட்டட் - பிரிட்டிஷ் நிறுமம்
  2. யூனியன் கார்பைடு - அமெரிக்க நிறுமம்
  3. கோகோ கோலா கழகம் - அமெரிக்க நிறுமம்.
  4. பிலிப்ஸ் - டச்சு நிறுமம்
  5. இன்டர்நேஷனல் பிசினஸ் மெஷீன் - அமெரிக்க நிறுமம்
- <u>சிறப்பியல்புகள் :</u>
  1. ஒரேசமயத்தில் பல நாடுகளில் நடத்தப்படும் வியாபாரம்
  2. மிகப்பெரிய அளவில் நடைபெறும் வியாபாரம்
  3. போக்குவரத்து செலவுகள் குறைந்த வியாபாரம்
  4. இச்செலவுகளை குறைப்பவை கச்சாப்பொருட்கள், பணியாட்கள், சந்தை ஆகியவை.
  5. அயல்நாட்டு முதலீடுகள் வளரும் நாடுகளுக்கு செல்ல உதவும் வியாபாரம்.

41 ஆ) **அரசுத் தொழில்களின் நோக்கங்களை விவரி.** (ஏதேனும் ஐந்து)

1. <u>பல்வகை உற்பத்தி செய்ய உதவுவது :</u>
   - இலாபம் ஈட்டுவதிலேயே குறியாக இருக்கும் தனியார் தொழில் முனைவோர், இலாப வாய்ப்பு மிகுந்த தொழில்களில் மட்டும் முதலீடு செய்ய விரும்புவர். இலாப வாய்ப்புகள் அதிகம் இல்லாத, அதே சமயம் நாட்டுக்குத் தேவையான,தொழில்களில் முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள்.
   - தனியார் துறை மேற்கொள்ள அஞ்சும் தொழில்களில் முதலீடு செய்து மக்களுக்குச் சேவையாற்றுவதற்கு அரசு நிறுவனங்களை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகின்றது.
2. <u>அடிப்படைத் தொழில்கள் வளர்ச்சி :</u>
   - பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத தொழில்களை அடிப்படைத் தொழில்கள் எனலாம்.
   - எடுத்துக்காட்டாக இரும்பு, எஃகு ஆலைகள், வேதியியல் தொழில்கள் போன்றவை அடிப்படைத் தொழில்களாகும்.
   - இத்தகைய தொழில்கள் அரசுத் தொழில்களாகவே இருப்பதே சாலச்சிறந்தது.
3. <u>பேரளவு முதலீட்டு நிறுவனங்கள் :</u>
   - சில தொழில் நிறுவனங்களில் பேரளவு முதலீடு செய்யப்பட வேண்டும்.
   - மேலும், அந்நிறுவனங்களில் தொழில் உற்பத்தித் தொடக்கக் காலம் நீண்டதாக இருக்கும்.
   - தனியார் தொழில் முனைவோர்களால் அப்பேரளவு முதலீட்டினை அளிக்கமுடியாது.
   - எ.கா : இரயில், கப்பல் கட்டுவது, மின்சக்தி
   - எனவே, அத்துறையில் அரசே தனக்குச் சொந்தமான நிறுவனங்களை ஏற்படுத்தும்.

4. **இன்றியமையாத வசதிகளை நல்குவது :**
- குடிநீர், மின் உற்பத்தி, மின் சக்தி, எரிவாயு, போக்குவரத்து, தகவல் தொடர்பு போன்றவை நாடு முழுவதும் அன்றாடம் தேவைப்படும் இன்றியமையாத வசதிகள் ஆகும்.
- இத்தேவைகள் மிகக் குறைந்த விலையில் பூர்த்தி செய்யப்படவேண்டும்.
- எனவே, இவ்வசதிகளைச் செய்து தரும் அமைப்புகள் அரசுத் தொழில்களாகவே இயங்க வேண்டும்.
- அவற்றைத் தனியாரிடம் ஒப்படைக்க இயலாது.

5. **முற்றுரிமை நிறுவனங்களை ஏற்படுத்துவது :**
- ஒரு நாட்டை அயல் நாடுகளின் தாக்குதலிலிருந்து காப்பது மிகவும் இன்றியமையாதது.
- நாட்டின் பாதுகாப்புச் சார்ந்த தொழில்கள் தனியார் வசமிருந்தால் ஒரு நெருக்கடி ஏற்படும் பொழுது அவர்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பை நல்காமல் போகும் நிலை உருவாக வாய்ப்புண்டு.
- மேலும் அவர்கள் நாட்டின் பாதுகாப்பு குறித்த இரகசியங்களை எதிரி நாடுகளுக்குச் சொல்லக்கூடிய அபாயமும் இருக்கிறது.
- எனவேதான், பாதுகாப்புத் தொழில்களை எப்போதும் அரசே ஏற்று நடத்தி வருகிறது.

6. **அனைத்துப் பகுதிகளும் சமமாக பொருளாதார வளர்ச்சி பெறுதல் :**
- தொழில், உற்பத்தி வளர்ச்சியின் நோக்கம் நாட்டிற்குத் தேவையான அனைத்து உற்பத்தித், தொழில்களை ஏற்படுத்துவதேயாகும். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சமச்சீரான முன்னேற்றம் ஏற்பட வேண்டும். தனியார் துறையினர், இலாபம் ஈட்ட வாய்ப்பு இல்லாத, மற்றும் நாட்டின் பின் தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைக்க விரும்புவதில்லை.
- இப்பகுதிகளில் தொழில்களை அமைக்கத் தனியார் துறையினரை அரசு ஊக்குவிக்கலாமே தவிர, கட்டாயப்படுத்த முடியாது.
- அந்நிலையில் அரசு அங்கு தொழில்களை நிறுவுவது சாலச் சிறந்தது.

7. **நிறை வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துதல் :**
- நிறை வேலைவாய்ப்புப் பொதுவுடமை உற்பத்தியினாலேயே ஏற்படும்.
- முழு வீச்சில் செயல்படும் தனியார் துறையைப் பெற்றுள்ள வளர்ச்சியடைந்த நாடுகள்கூட நிறை வேலை வாய்ப்பைப் பெறுவதில்லை.
- அரசு பொருளாதாரத் துறையில் கவனம் செலுத்தித் திட்டங்கள் தீட்டவேண்டும். இப்பணிகளின் ஒரு பகுதியாக அரசே தொழில்களையும் தோற்றுவித்து நடத்த வேண்டும்.

42. அ) சமுதாயத்தில் தனியாள் வணிகரின் பங்கினை விவரி?

1. **வேலையில்லா பிரச்சனைக்குத் தீர்வு**
- குறைந்த கல்வியறிவு உடையவருக்கும், கல்வியறிவு அற்றவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கிறது.
- சமுதாயத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதில், தனிவணிகம் பெரும் பங்கு வகிக்கிறது

1. **முதலீட்டிற்கான வாய்ப்பு**
- சிறு முதலீட்டாளர்கள், குறைந்த முதலுடன் தொழில் தொடங்க வாய்ப்பளிக்கிறது.
- சிறு முதலீட்டாளர்களின் சேமிப்புகளை, உற்பத்திக்குப் பயன்படுத்த உதவுகிறது.

2. **குறைந்த விலையில் பொருட்களை அளித்தல்**
- நிர்வாகச் செலவு குறைவாக உள்ளதால், தனி வணிகர் பொருட்களின் மீதான அதிக பட்ச விலையை விட குறைவான விலைக்கு பொருட்களை விற்பனை செய்கிறார்.

3. **சிறு உற்பத்தியாளருக்கு உதவுதல்**
- உள்ளூர் உற்பத்தியாளரிடமிருந்து பெரும்பான்மையான பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.
- இதனால் உள்ளூர் சிறு உற்பத்தியாளர்கள், தனிவணிகரால் பயன்பெறுகின்றனர்.

4. **தரமான பொருட்களை அளித்தல்**
- தற்காலத்தில் தனி வணிகர் தன் வியாபார நன்மதிப்பைக் காக்க உயர்ந்த தரமான பொருட்களை விற்பனை செய்கிறார்.
- விற்ற பொருட்களில் குறையிருப்பின் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறார்.

5. **தர்ம சிந்தனையுடைய நடவடிக்கைகள்**
- தனி வணிகர்கள் தங்களுக்குள் குழுக்களை ஏற்படுத்திக் கொண்டு, கண் பரிசோதனை முகாம்கள், பூங்காக்களைப் பராமரித்தல், பாதையில் தடுப்புகளை ஏற்படுத்துதல், பள்ளிகளுக்கு அறைகலன்களை வழங்குதல் போன்ற பல்வேறு சமுதாய முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

6. **வருமானம் மற்றும் வளங்களைச் சமமாகப் பகிர்ந்தளித்தல்**
- பலர் வியாபார உலகில் தனியாள் வணிகராக ஈடுபட வாய்ப்பளிப்பதால், வருமானம் மற்றும் வளங்களைச் சமமாகப் பகிர்ந்தளிக்க உதவுகிறது.

7. **நுகர்வோருக்கு உதவுதல்**
- தனி வணிகர் ஒருவரே உரிமையாளர் என்பதால் , சந்தை நிலவரத்திற்கு ஏற்பவும் , வாடிக்கையாளரின் விருப்பத்திற்கு ஏற்பவும், தன் வியாபாரத்தை மாற்றிக் கொள்ளலாம்
- தனியாள் வணிகர்கள், நுகர்வோர் வீட்டு வாசலிலேயே பொருட்களை கிடைக்கச் செய்கிறார்கள்.
- இதனால் நுகர்வோரின் நேரமும், உழைப்பும் மிச்சப்படுத்தப்படுகிறது.

42 ஆ) கூட்டறவு சங்கத்தின் குறைபாடுகளை விவரிக்க. (ஏதேனும் ஐந்து)

1. **திறமையற்ற மேலாண்மை**
- கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்கள்அமைப்பை மேலாண்மை செய்யப் போதுமான திறமையும் அனுபவமும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள்.

2. **வரையறு முதல்**
- ஒரு நபர் ஒரு வாக்கு முறை உறுப்பினர்கள் அதிக முதலீடு செய்வதை தடைசெய்கிறது. இதனால் இவ்வமைப்பு குறைந்த முதலீடுகளால் சிரமப்படுகிறது.

3. **தக்க தூண்டுகோல் இல்லாமை**
- இலாப நோக்கு இல்லாமையும், குறைந்தபட்ச 9 விழுக்காடு பங்காதாயமும், மேலாண்மையின் பொறுப்புக் குறைய காரணமாகிறது. பணியாளர்கள் குறைந்த ஊதியம் பெறுவதால் கடின உழைப்பில் ஆர்வம் காட்டுவதில்லை.

4. **ஒற்றுமையின்மை**
- சில வேளைகளில் உறுப்பினர்கள் அவர்களுக்குள் ஒற்றுமையாக இருப்பதில்லை. இதனால் கூட்டுறவு அமைப்பின் வியாபாரம் பாதிக்கப்படுகிறது.

5. **அசைக்க முடியாத மனிதர்களின் அதிகாரம்**
- அரசியல் சார்பில்லாத கூட்டுறவுச் சங்கத்தில், சில உறுப்பினர்களின் அரசியல் செல்வாக்கோடு அமைப்பை மேலாண்மை செய்கின்றனர்.

6. **உரிமையை மாற்ற இயலாமை**
- பங்குகளின் உரிமையை மாற்ற இயலாது. சங்கத்திலிருந்து விலக விரும்புவோர் பங்குகளை சங்கத்தில் திருப்பிக் கொடுத்து பங்கு முதல் தொகையைத் திரும்பப் பெறலாம்.

7. **இரகசியம் காவாமை**
- சங்கத்தின் நடவடிக்கைகள், சங்கக் கூட்டங்களில் விவாதிக்கப்படுகிறது. இதனால் செயல்முறை இரகசியங்களைக் காக்க முடிவது இல்லை.

43. அ) கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகளை விவரி.
(ஏதேனும் ஐந்தினை மட்டும் எழுதவும்)

I. நீதிமன்ற ஆணையில்லாமல் கலைப்பு (பிரிவு 40 முதல் 43 வரை) :

1) உடன்பாட்டால் கலைப்பு (பிரிவு 40) :

- அனைத்துக் கூட்டாளிகளின் சம்மதத்தின் பேரில் அல்லது கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடனபாட்டால் கூட்டாணமை நிறுவனம் கலைக்கப்படலாம்.

2) கட்டாயக் கலைப்பு (பிரிவு 41) :

i) அனைத்து கூட்டாளிகளின் நொடிப்பு நிலையாலோ அல்லது
ii) ஒருவர் தவிர மற்ற எல்லாக் கூட்டாளிகளின் நொடிப்பு நிலையாலோ கூட்டாண்மை நிறுவனம் கட்டாயம் கலைக்கப்படும்.
iii) செய்துவரும் தொழில் சட்டத்திற்குப் புறம்பானதாக இருந்தால் நிறுவனம் கட்டாயமாக கலைக்கப்படும்
(எ.கா.) மது விலக்குச் சட்டம் இயற்றப்படுதல், மற்றொரு நாட்டுடன் போர் ஏற்படுதல்.

3) சில நிகழ்ச்சிகள் நிகழ்வுறுவதால் கலைப்பு (பிரிவு 42) :

i) ஒரு கூட்டாளி இறந்து விட்டால்
ii) குறிப்பிட்ட காலத்திற்கான கூட்டாண்மையாயின், அக்காலம் முடிவடைந்துவடன்
iii) குறிப்பிட்ட தொழில்களைச் செய்ய மட்டுமே கூட்டாண்மை தொடங்கப்பட்டிருப்பின், அத்தொழில்கள் நிறைவு பெற்றுவுடன் .
iv) ஒரு கூட்டாளி நொடிப்பு நிலை அடைந்து விட்டதாக, நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால் கூட்டாண்மை கலைக்கப்படும்.

4) அறிவிக்கையால் கலைப்பு (பிரிவு 43) :

கூட்டாளி எவரேனும் நிறுவனத்தைக் கலைக்கும்படி, பிற கூட்டாளிகளுக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தால் நிறுவனம் கலைக்கப்பட வேண்டும்.

II. நீதிமன்றத்தால் கலைப்பு (பிரிவு 44) :

கூட்டாளிகளுள் ஒருவர் கீழ்காணும் காரணங்களுக்காக வழக்கு தொடர்ந்து நிறுவனத்தைக் கலைக்கலாம்.

i) கூட்டாளியின் மனச்சமநிலை இழப்பு :
ஒருவர் பித்து நிலையடைந்தால் , நீதிமன்றம் கலைப்பிற்கான ஆணையைப் பிறப்பிக்கலாம்.
ii) நிலையான திறமையின்மை :
கூட்டாளி ஒருவர் தொழில் செய்யும் திறமையை இழந்திருந்தால், நிறுவன கலைப்பிற்கான ஆணையை நீதிமன்றம் பிறப்பிக்கும்.
iii) உடன்பாட்டை தொடர்ந்து மீறுகை :
கூட்டாண்மை உடன்பாட்டை ஒரு கூட்டாளி தொடர்ந்து மீறிக் கொண்டிருந்தால், மற்றக் கூட்டாளிகள் கூட்டாண்மையை கலைக்கக் கோரி நீதி மன்றத்தை அணுகலாம்.
iv) கூட்டாளி ஒருவரின் ஒழுக்கக்கேடு :
கூட்டாளி ஒருவர் ஒழுக்கக்கேடான குற்றத்தை செய்திருப்பின், ஏனைய கூட்டாளிகள் நிறுவனத்தை கலைக்கக்கோரி வழக்குத் தொடுக்கலாம்.
v) உரிமைமாற்றம் :
கூட்டாளி ஒருவர், தொழிலில் தனக்குரிய உரிமை முழுவதையும், மூன்றாம் நபருக்கு மாற்றிக் கொடுத்துவிட்டால், ஏனைய கூட்டாளிகள் கூட்டாண்மையைக் கலைக்கக்கோரி நீதிமன்றத்தை அணுகலாம்.
vi) நீதி நேர்மை அடிப்படையில் :
நிறுவனத்தைக் கலைத்திடப் போதிய அடிப்படை காரணம் உள்ளது, என்று நீதிமன்றம் கருதினால் கூட்டாண்மை கலைக்கப்படலாம்.

43 ஆ) செபியின் பணிகள் விளக்குக? (ஏதேனும் 5 மட்டும்)

1. பங்கு மாற்றகங்களின் வியாபாரத்தை ஒழுங்கு படுத்துதல்.
2. இடைத்தரகர்களான பங்குத் தரகர்கள், துணைத் தரகர்கள், வெளியீட்டு வங்கியர், ஒப்புறுதியாளர்கள் மற்றும் பத்திரச் சந்தையுடன் தொடர்புடைய மற்ற இடைத்தரகர்களின் செயல்பாடுகளைப் பதிவுசெய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
3. பரஸ்பர நிதியங்கள் உள்ளிட்ட முதலீட்டு நிறுவனங்களைப் பதிவு செய்து, ஒழுங்கு படுத்துதல்.
4. சுயக் கட்டுப்பாட்டு நிறுவனங்களைத் தோற்றுவித்தலும் ஒழுங்குபடுத்துதலும்
5. பத்திரச் சந்தையில் மோசடியான மற்றும் நேர்மையற்ற வணிக நடவடிக்கைகளைத் தடை செய்தல்.
6. முதலீட்டாளர்களிடையே விழிப்புணர்ச்சியை வளர்த்தல் மற்றும் இடைத்தரகர்களுக்கான பயிற்சி அளித்தல்.
7. பத்திரங்களுக்கான உள் வணிகத்தைத் தடை செய்தல்.
8. பங்குகளைக் கணிசமான அளவில் வாங்கி, நிறுமங்களை எடுத்துக் கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல்.
9. பங்கு மாற்றங்களிலிருந்து அவற்றின் அமைப்பு போன்ற விவரங்கள் பெறுவது, பங்கு மாற்றங்களைப் பரிசோதனை செடீநுதல், விசாரணை மற்றும் தணிக்கை செய்தல்.
10. மத்திய அரசால் ஒப்படைவு செய்யப்பட்ட பணிகளைச் செய்தல்.

44. அ) ஒரு நிறுமத்திற்கும், ஒரு கூட்டாண்மைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
(ஏதேனும் 5 மட்டும்)

வ. எண்	பொருள்	கூட்டாண்மை நிறுவனம்	கூட்டுப் பங்கு நிறுமம்
1	சட்டம்	இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் 1932	இந்திய நிறுமங்கள் சட்டம் 1956
2	சட்டத் தக உடைமை	சட்டப்படி தனியாள் தன்மை இல்லை	உறுப்பினர்களிடமிருந்து தனித்து இயங்குகிறது
3	உறுப்பினர் எண்ணிக்கை	குறைந்தது இருவர் தேவை. அதிகபட்சம் வங்கித்தொழில் செய்ய 10 பேர், பிற தொழில் எனில் 20 பேர் தேவை.	குறைந்தபட்சம் தனி நிறுமத்தில் 2 பேர் பொது நிறுமத்தில் 7 பேர். அதிகபட்சம் தனி நிறுமத்தில் 50 பேர். பொது நிறுமத்தில் வரம்பு இல்லை
4	உறுப்பினர் ஆதல்	தனிநபர் மட்டுமே உறுப்பினர் ஆகலாம்.	ஒரு நிறுவனம் கூட உறுப்பினர் ஆகலாம்.
5	தன்மை	இலாப நட்டத்தை பகிர்ந்துகொள்ள ஒப்புக்கொண்டவர்கள் இடையே நிலவும் உறவு.	சட்டம் உருவாக்கிய ஒரு செயற்கை நபர்.
6	மேலாண்மை	எல்லோரும் சேர்ந்தோ, எல்லோருக்குமாக ஒருவரோ தொழிலை நடத்துவர்	இயக்குநர் அவையிடம் மேலாண்மை ஒப்படைக்கப்படுகிறது.
7	பதிவு	பதிவு கட்டாயம் அல்ல	பதிவு கட்டாயம்

8	நீடித்த வாழ்வு	கூட்டாளிகளின் இறப்பு, பித்து நிலை, நொடிப்பு நிலை போன்றவை கூட்டாண்மையைக் கலைக்கும்	கூட்டாளிகளின் இறப்பு, பித்து நிலை, நொடிப்பு நிலை போன்றவை நிறுமத்தைக் கலைக்காது.
9	பொறுப்பு	கூட்டு மற்றும் தனி பொறுப்பு. வரையறா பொறுப்புடையது	வரையறுக்கப்பட்டது.
10	கலைப்பு	எப்போது வேண்டுமானாலும் கலைக்கலாம்	குறிப்பிட்ட சூழ்நிலையில்தான் கலைக்கலாம்.

44 ஆ) இயக்குருக்குரிய அதிகாரங்கள் யாவை?

1. <u>பொது ஆதிகாரங்கள்</u>
   - ❖ நிறுமம் எச்செயல்களில் ஈடுபட அதிகாரம் பெற்றுள்ளதோ, அந்த அனைத்துச் செயல்பாடுகளில் ஈடுபடவும், அவற்றிற்கு வேண்டிய அதிகாரங்களைப் பயன்படுத்தவும் ஒரு நிறுமத்தின் இயக்குநரவைக்கு உரிமை உண்டு.
   - ❖ ஆயினும் நிறுமம் எச்செயலையாவது பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படிதான் செய்ய வேண்டும் என்றிருப்பின், அதனை இயக்குநர், தானே செய்யக்கூடாது.
2. <u>சட்டமுறை ஆதிகாரங்கள்</u>

   இயக்குநர் அவைக் கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றி, கீழ்க் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

   1) அழைப்புப் பணம் செலுத்துமாறு கோரிட
   2) கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட
   3) கடனீட்டுப் பத்திரம் வெளியிடாமல் வேறுவகையில் கடன் பெற
   4) நிறுமத்தின் நிதியினை முதலீடு செய்ய
   5) கடன் வழங்க.
3. <u>இயக்குநரவைக் கூட்டத்தில் பயன்படுத்தக் கூடிய பிறஅதிகாரங்கள்</u>
   1) இயக்குநர் பதவியில் காலியிடம் இருப்பின், அதனை நிரப்ப.
   2) செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கியிருப்பின், கூடுதல் இயக்குநர்களை நியமித்துக் கொள்ள.
   3) செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கியிருப்பின், மாற்று இயக்குநர் ஒருவரை நியமிக்க.
   4) எந்த ஒரு இயக்குநரோ, அவருடைய உறவினரோ தொடர்புற்றிருக்கும் ஒப்பந்தங்கட்கு அனுமதி வழங்க
   5) ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் விளம்புவதற்காக பங்காதாயச் சதவிகிதத்தைக் குறிப்பிட்டுப் பரிந்துரைக்க.
   6) அதே மேலாண்மையின் கீழ் இயங்கும் நிறுமங்களில் முதலீடு செய்ய
   7) நிறுமத்தின் முதலாவது தணிக்கையரை நியமிக்க.
   8) பதவி விலகலாலன்றி வேறு காரணத்தால் தணிக்கையர் பதவியில் எழுந்துள்ள காலியிடத்தை நிரப்ப.

45. அ) பங்குகட்கும் கடனீட்டுப்பத்திரங்கட்கும் உள்ள வேறுபாடுகளை விவரி. (ஏதேனும் 5)

வ எண்	தலைப்பு	பங்குகள்	கடனீட்டுப்பத்திரங்கள்
1	பொருள்	பங்கு முதலின் சிறு கூறு பங்கு எனப்படும். பங்குகளை வைத்திருப்பவர் பங்குதாரர் ஆவர். இவர் நிறுமத்தின் உரிமையாளர் ஆவார்.	கொடுத்த கடனை உறுதிப்படுத்தும் பத்திரம் ஆகும். இதை வைத்திருப்பவர் கடனீட்டுப் பத்திரதாரர் ஆவார். இவர் நிறுமத்தின் கடனாளர் ஆவார்.
2	இலாபம்	இவருக்கு பங்காதாயம் வழங்கப்படும்.	இவருக்கு கடனீட்டுப் பத்திரங்கள் மீது வட்டி வழங்கப்படும்.
3	ஒப்புதல்	நிறுமம் இலாபம் ஈட்டியிருந்தாலும்,பங்காதாயம் வழங்க இயக்குநரின் ஒப்புதல் தேவை.	கடனீட்டுப் பத்திரங்கள் மீது வட்டி வழங்க யாருடைய ஒப்புதலும் தேவை இல்லை.
4	பொறுப்பு	வைத்துள்ள பங்குகள் மீது செலுத்தப்படாத தொகைக்கு மட்டுமே பொறுப்பாகும்.	பொறுப்பு ஏதும் இல்லை.
5	வட்டத்தில் வெளியிடுதல்	நிபந்தனைக்கு உட்பட்டு வெளியிடவேண்டும்.	நிபந்தனைகள் ஏதும் இல்லை.
6	சொத்துக்கள் மீது பிணை	நிறுமச் சொத்துக்கள் மீது பிணை ஏதும் இல்லை.	நிறுமச் சொத்துக்களை பிணையாக பெற்றுள்ளார்.
7	திரும்பத் தருதல்	மீள்தகு முன்னுரிமைப் பங்குகள் தவிர மற்றவை திரும்பித் தரத் தக்கதல்ல.	கடனீட்டுத் தொகையைத் திருப்பித் தரவேண்டும்.
8	கூட்டம்	பங்குதாரர் நிறுமக் கூட்டங்களில் கலந்துகொள்ள உரிமை உண்டு.	கடனீட்டுப் பத்திரதாரர் நிறுமக் கூட்டங்களில் கலந்து கொள்ள உரிமையில்லை.
9	மூலதனம் திரும்பப் பெறுதல்	கடனீட்டுப் பத்திரதாரர் தனது தொகையை பெற்ற பிறகுதான் பங்குதாரர் தொகை கிடைக்கும்.	கடனீட்டுப் பத்திரதாரர் தனது தொகையை பங்குதாரருக்கு முன்பே பெறுகிறார்
10	இலாபத்தின் அளவு	நிறுமத்தின் இலாபத்திற்க்கு ஏற்ப மாறும்.	வட்டி வீதம் மாறாது.

45 ஆ) விளக்க குறிப்பு வரைக.

<u>அ. பகராள்</u>

- i) ஒரு பொதுக் கூட்டத்தில் தனக்குப் பதில் கலந்துகொள்ள உறுப்பினரால் நியமிக்கப்படும் ஒரு நபரைக் குறிப்பதே பகராள் எனப்படும்.
- ii) பகராளை நியமிக்கும் ஆணைப் பத்திரமும் பகராள் எனும் சொல் குறிக்கும்.

<u>பகராள் குறித்த கீழ்க்கண்டவற்றைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.</u>

1. பங்கு முதலுடைய நிறும உறுப்பினர்களுக்கு, பகராளை நியமிக்கும் உரிமை உண்டு.
2. நிறுமத்தின் உறுப்பினராக பகராள் இருக்க வேண்டிய அவசியம் இல்லை.
3. பகராள் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். ஆனால்,அங்கு பேசும் உரிமை அவர்க்கு இல்லை.
4. வாக்குப்பதிவு நடைபெற்றாலொழிய, பகராளுக்கு வாக்கு செலுத்தும் உரிமை இல்லை.
5. ஒன்றுக்கு மேற்பட்ட பகராள்களை ஒரு உறுப்பினர் தன் சார்பில் நியமிக்கலாம்.

ஆ. <u>குறைவெண்</u>

- i) ஏதேனும் பொருள் குறித்துச் செல்லத்தக்க வகையில் தீர்மானம் நிறைவேற்ற நடைபெறும் கூட்டத்தில் நேரிடையாகக் கலந்துகொள்ள வேண்டிய குறைந்தளவு உறுப்பினர் எண்ணிக்கையே குறைவெண் ஆகும்.
- ii) நிறுமச் செயல்முறை விதிகள்குறைவெண் என்ன என்பதைக் குறிப்பிடும்.

iii) தனி வரையறு நிறுமமாயின், குறைந்தது இரு உறுப்பினர்களும், பொது வரையறு நிறுமமாயின் 5 உறுப்பினர்களும் நேரில் வந்து கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டிய குறைவெண் ஆகும்.

iv) அவைக் கூட்டத்தைப் பொருத்தவரை இயக்குநரவை உறுப்பினர்களில் மூன்றில் ஒன்றாகும்

v) கூட்டத்தில் குறைவெண் எத்துணை பேர் வந்துள்ளனர் என்பதைக் கணக்கிட, பகராள் சேர்த்துக் கணக்கிடக் கூடாது. நேரிடையாக வந்திருக்கும உறுப்பினர்களின் எண்ணிக்கையையே கருத்தில் கொள்ள வேண்டும்.

vi) கூட்டம் தனது அலுவலை தொடங்கும் போது குறைவெண் இருந்தால் போதுமானதாகும்.

இ. நிகழ்ச்சிக் குறிப்பேடு

- நிறுமமொன்றின் பல்வகையான கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் எடுக்கப்பெற்ற முடிவுகளின் உண்மையான, சரியான பதிவுகள்தான் நிகழ்ச்சிக் குறிப்பேடு எனப்படுகிறது.
- நிகழ்ச்சிக் குறிப்பேடு சுருக்கமாகவும், உண்மையானதாகவும், வருணனை வார்த்தைகள் அற்றதாகவும் இருக்க வேண்டும்.

நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் காணப்பெற வேண்டியவை.

1. கூட்டத்தின் தன்மை அதாவது, ஆண்டுப் பொதுக் கூட்டமா, சிறப்புப் பொதுக்கூட்டமா, (இயக்குநர்) அவைக் கூட்டமா என்ற விவரம்.
2. கூட்ட நாள், காலம், இடம் ஆகியனப் பற்றிய விவரம்.
3. கூட்டத் தலைவர், இயக்குநர்கள், செயலர் ஆகியோர் பெயர்களும், வந்திருந்த உறுப்பினர்தம் எண்ணிக்கையும்.
4. நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட வரிசையில், நடைபெற்ற நிகழ்ச்சிகளின் சுருக்கம்.
5. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்
6. கூட்டத் தலைவரின் கையொப்பம் (நாளுடன்)

46. அ) பங்கு மாற்றகம் -- வரைவிலக்கணம் எழுதுக. பங்கு மாற்றகத்தின் இயல்புகள் (மூன்று) மற்றும் பணிகள்(மூன்று) விளக்குக.

வரைவிலக்கணம் :

- பத்திரங்கள் ஒப்பந்தச் (ஒழுங்காற்றுச்) சட்டம் 1956-ன் படி பங்கு மாற்றகம் என்பது, "பங்குப் பத்திரங்களை வாங்குதல் அல்லது விற்பனை செய்தல், அவற்றைச் சீர்படுத்துதல், கட்டுப்படுத்துதல் போன்ற நோக்கங்களுக்காக அமைக்கப்பட்ட பதிவு பெற்ற அல்லது அவ்வாறில்லாத நிறுவனம் அல்லது தனி நபர்களின் அமைப்பாகும்".

இயல்புகள் :

1. அது பத்திரங்களை வாங்குதல், விற்பனை செய்தல் போன்ற செயல்கள் நடைபெறும் இடமாகும்.
2. பங்கு மாற்றகங்கள், பதிவு பெற்ற அல்லது அவ்வாறு இல்லாத தன்னிச்சையான சங்கமாகும்.
3. பங்கு மாற்றகங்கள் தங்களுக்காக வியாபாரம் செய்வதில்லை. தங்கள் உறுப்பினர்களுக்கு நிறுமப் பத்திரங்களில் வாணிபம் செய்வதற்கான வசதிகளைச் செய்து தருகின்றன.
4. பங்கு மாற்றகங்களில் செய்யப்படும் வியாபாரம் கடுமையான சட்ட திட்டங்களுக்கு உட்பட்டது. ஒவ்வொரு நடவடிக்கைக்கும் சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.
5. ஒவ்வொரு பங்கு மாற்றகமும், தனக்குரிய சட்ட திட்டங்களை உருவாக்கிக் கொள்கிறது. பங்கு மாற்றகங்களின் சட்ட திட்டங்களுக்கு உறுப்பினர்கள் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். புறம்பாக நடக்கும் உறுப்பினர்கள் அப் பதவியிலிருந்து விலக்கப்படுவர்.
6. பங்கு மாற்றகங்களின் அலுவல் பட்டியலில் சேர்க்கப்பட்ட பத்திரங்கள் மட்டுமே இங்குக் கையாளப்படுகின்றன. நிறுமங்கள், அறக்கட்டளை அரசுகள், நகராண்மைக் கழகங்கள் போன்றவற்றினுடைய பத்திரங்களும் இங்குக் கையாளப்படுகின்றன.

பணிகள் :

1. உடனடிச் சந்தை
   - பங்கு மாற்றகம், பத்திரங்களுக்கு நீர்மை தன்மையையும் உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தையையும் ஏற்படுத்துகிறது.
   - இதனால் தங்கள் சேமிப்பைக் குறுகிய காலத்துக்குக் கூட முதலீடு செய்ய மக்களை ஈர்க்கின்றது.
2. சேமிப்பைத் திரட்டுதல்
   - தனிப்பட்டோர், வியாபார நிறுவனம், கூட்டுறவு அமைப்பு ஆகியவற்றின் சேமிப்பைத் திரட்டி பத்திரங்களில் முதலீடு செய்ய பங்கு மாற்றகங்கள் உதவுகின்றன.
3. மூலதன ஆக்கம்
   - பங்கு மாற்றகம், சேமிப்பைத் திரட்டுவதுடன் பொதுமக்களை சேமிக்கவும் தூண்டுகிறது.
   - இது மூலதன ஆக்கத்திற்கு வழிவகுக்கின்றது.

46 ஆ. ஏதேனும் ஐந்து கூட்டுறவுச் சங்கங்களின் வகைகளை எழுதுக.

1. வேளாண்மை கடன் சங்கங்கள்
   - ஒரு கிராமத்திலுள்ள விவசாயிகளால் பொதுவாக அமைக்கப்படும் கடன் சங்கமாகும். விவசாயம் சார்ந்த உற்பத்தி மற்றும் உற்பத்தி சாரா நோக்கங்களுக்காக உறுப்பினர்களுக்கு கடன் வசதியளிக்கிறது.
   - இச்சங்கங்கள் ஊரக நாணயச் சங்கங்கள் (அ) பிரதம நாணயச் சங்கங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
2. வேளாண்மைச் சாரா கடன் சங்கங்கள்
   - வேளாண்மைச் சாரா கடன் சங்கங்கள் ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மக்களால் அமைக்கப்படுகிறது.
   - இதன் நோக்கம் உறுப்பினர்களுக்கு உற்பத்திச் சார்ந்த நோக்கங்களுக்கு உதவி புரிவதாகும். அவை மூன்று வகைகளாகப் பிரிக்கப்படும்.
     1. நகர வங்கி 2. பணியாளர் கடன் சங்கங்கள் 3. தொழிலாளர் கடன் சங்கங்கள்
3. நாணயம் சாரா சங்கங்கள்
   - இந்த சங்கங்கள் பொருளாதார பிரச்சனைகளுக்கு ஒரு தீர்வாகும்.
   - இது பொருளாதார பிரச்சனையுள்ள மக்களால் அமைக்கப்படுவது.
   - இது இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படும்.
     1. வேளாண்மை சாரா கடன் சங்கங்கள்
     2. வேளாண்மைச் சாரா கடன் சாராத சங்கங்கள்
4. வேளாண்மைச் சாரா கடன் சங்கங்கள்
   - இந்த சங்கங்கள் உறுப்பினர்களின் குறைந்த வளத்தை வைத்துக்கொண்டு குறைந்த வட்டியில் கடன்பெறச் செய்கிறது.
   - இது உறுப்பினர்களின் பொருட்களுக்கு சந்தையிடவும், பண்ணை செய்யவும், தொழில் சேவைகளையும் செய்கின்றது.

   பின் வருபவை இதன் வகைகளாகும்.

   அ. கூட்டுறவு சந்தையிடுதல் சங்கம்

   ஆ. கூட்டுறவு பண்ணை சேவை சங்கம்

   இ. தொழிற்சாலை கூட்டுறவு சங்கம்
5. வேளாண்மை சாரா கடன் சாரா சங்கங்கள்
   - இந்தச் சங்கங்கள் நடுத்தர மற்றும் பின்தங்கிய வருவாய் உள்ள மக்களுக்கு உதவி புரிய தொடங்கப்பட்டதாகும்.
   - இதன் முதன்மை நோக்கம் பலவகையான சேவைகள் உறுப்பினர்களுக்கு குறைந்த செலவில் செய்து தருவதாகும்.

   அதன் பல்வேறு வகைகளாவன.

   1. நுகர்வோர் கூட்டுறவு 2. உற்பத்தியாளர் கூட்டுறவு 3. கூட்டுறவு வீட்டு வசதி 4. கூட்டுறவு பண்டகசாலை

47. அ) கூட்டாண்மை - தனியாள் வணிகம் வேறுபாடுகள் யாவை?

வ. எண்	தன்மைகள்	கூட்டாண்மை	தனியாள் வணிகம்
1	சட்டம்	இந்தியக் கூட்டாண்மைச் சட்டம், 1932 நெறிப்படுத்துகிறது	தனிச் சட்டம் ஏதுமில்லை.
2	உறுப்பினர் எண்ணிக்கை	குறைந்த அளவு இரண்டுபேர். <u>அதிக அளவு</u> : வங்கித்தொழில் எனில் 10 பேர், இதர தொழில் எனில் 20 பேர்	ஒருவர் மட்டுமே
3	உடன்பாடு	இது உடன்பாட்டால் உருவாக்கப்படுகிறது.	உடன்பாடு அவசியம் இல்லை.
4	பதிவு	பதிவு கட்டாயம் இல்லை	பதிவு தேவையில்லை
5	உரிமையும் கட்டுப்பாடும்	கூட்டாளிகளிடம் உரிமையும் கட்டுப்பாடும் உள்ளது	தனியாள் வசம் உள்ளது.
6	மேலாண்மை	அனைத்து கூட்டாளிகளுக்கும் மேலாண்மையில் பங்கேற்க உரிமை உண்டு	தனி நபரால் மேலாண்மை செய்யப்படுகிறது
7	முதல்	இதில் ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் முதலிடுகிறார்கள்.	ஒரு நபர் மட்டும் முதலிடுவார்.
8	பொறுப்பு	கூட்டுப்பொறுப்பு	தனி நபர் பொறுப்பு
9	முகமை	ஒவ்வொருகூட்டாளியும் கூட்டாண்மையின் முதல்வராகவும் மற்ற கூட்டாளிகளின் முகவராகவும் கருதப்படுகிறார்	தானே முகவராக செயல்படலாம் அல்லது ஒரு முகவரை நியமித்துக் கொள்ளாம்.
10	இலாபப் பகிர்வு	ஒப்புக்கொண்ட விகிதத்தில் இலாபம் அல்லது நட்டத்தை பகிர்ந்து கொள்வார்கள்	இலாபம் அல்லது நட்டத்தை ஒருவரே ஏற்கவேண்டும்.
11	வேலைப் பகுப்பு	கூட்டாளிகள் வேலையை பகிர்ந்து கொள்வார்கள்	தனிநபர் என்பதால் வேலைப் பகிர்வு இல்லை
12	தொழில் இரகசியம்	கூட்டாண்மையில் தொழில் இரகசியங்களை காத்தல் கடினம்	தொழில் இரகசியங்களை காத்தல் எளிது
13	வாழ்வு	நிலைத்தத் தன்மைகுறைவு	நிலையற்றது

47.ஆ) பங்கு மாற்றகத்தின் நன்மைகள் யாவை?

<u>நிறுமத்திற்கு நன்மைகள்</u> :

1. பங்கு மாற்றகத்தில் கையாளப்படும் பங்குகளைக் கொண்டுள்ள நிறுமத்தின் மதிப்பு மூலதனச் சந்தையில் உயரும். நிறுமம் வலுவானது என்ற எண்ணம் உருவாகும்.
2. ஒரு நிறுமத்தின் பத்திரங்களுக்கான சந்தையை விரிவடையச் செய்கின்றது. அதாவது நிறுமங்களின் பங்குகளுக்குப் பரந்த அளவிலான சந்தை கிடைக்கிறது.
3. பங்கு மாற்றகத்தில், பங்குகள் விற்க மற்றும் வாங்கப்படுவதால், நிறுமத்தின் வருவாய், பங்காதாயம் மற்றும் சொத்து மதிப்புகளோடு ஒப்பிடுகையில் நிறுமத்தின் பங்குகளின் மதிப்பு கூடுகின்றது. இது நிறுமம் வேறொரு நிறுமத்தோடு இணைக்கப்படும்பொழுது சாதகமான பேரத்தைப் பெற உதவி செய்கிறது.
4. பங்கு மாற்றகம் தருகின்ற மறைமுகமான உதவிகளால் புதிய நிறுமங்கள் மூலதனச் சந்தையில் எளிதாகத் தனக்குத் தேவையான முதலீட்டினைப் பெற முடிகிறது.
5. ஊக வணிகர்களின் செயல்பாட்டினால் பட்டியலிடப்பட்ட பத்திரங்களின் விலைகளில் அடிக்கடி ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் குறைகின்றன.

<u>முதலீட்டாளருக்கு நன்மைகள்</u>:

1. பங்கு மாற்றகங்கள் முதலீட்டாளர்களின் விருப்பத்தையும் ஆர்வத்தையும் பாதுகாக்கின்றன. முதலீட்டாளர்கள் தமது விருப்பம்போல பத்திரங்களை உடனடியாக வாங்கவும் விற்கவும் ஏற்ற ஆயத்தச் சந்தையாகவும் இடையறாச் சந்தையாகவும் இவை விளங்குகின்றன. தரகர்களால் அவர்கள் ஏமாற்றப்பட மாட்டார்கள்.
2. பத்திரங்களுக்கான நிலையான சந்தையையும் முதலீடுகளுக்கான நீர்மைத் தன்மையையும் அளிக்கின்றது.
3. பங்கு மாற்றகத்தில் வாணிகம் செய்யப்படுகின்ற பத்திரங்கள் கடன்களுக்கு நல்ல பிணையங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
4. நிறுமங்களின் பத்திர மதிப்புகளை, விலைப்புள்ளிகளாகப் பங்கு மாற்றகங்கள் தினசரியாகவோ அல்லது பருவகால முறையிலோ வெளியிடுவதால், முதலீட்டாளர்கள் தங்கள் முதலீட்டின் உண்மையான மதிப்பை அறிந்து கொள்ள முடிகிறது.
5. நல்ல நிதி நிலைமையுடைய நிறுமங்களின் பங்குகள்தான் பெரும்பாலும் பங்குமாற்றகத்தில் வாணிகம் செய்யப்படுகின்றன. அதனால் முதலீட்டாளர்கள் நிதி நிலைமை சீரழிந்த நிறுமங்களில் முதலீடு செய்வதிலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர்.

<u>சமுதாயத்திற்கு ஆற்றும் சேவைகள்</u>

1. பங்கு மாற்றகங்கள் முதலீட்டாளர்களின் சேமிப்பை நிறுமங்களின் பத்திரங்களில் முதலீடு செய்விப்பதின் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி புரிகின்றன. பெருமளவு மூலதன உருவாக்கத்தையும் ஏற்படுத்துகின்றன.
2. பத்திரங்களின் விற்பனையை ஊக்கப்படுத்தி, (விரிவடையச் செய்து) சிறப்பாக மேலாண்மை செய்யப்படும் நிறுமங்களின் நிலைமையை உயர்த்துகின்றன.
3. நன்கு நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள் சுலபமாக நிதி வளங்களைப் பெறுவதற்குப் பங்கு மாற்றகங்கள் உதவுகின்றன.
4. அரசுக்குத் தேவையான நிதியை மக்களிடம் கடனாகப் பெறுவதற்கும், நாட்டிற்கு முக்கியத்துவம் வாய்ந்த வளர்ச்சித் திட்டங்களை அரசு நிறைவேற்றுவதற்கும் உதவுகின்றன.
5. கிடைத்தற்கரிய நிதி வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தப் பங்கு மாற்றகங்கள் உதவுகின்றன.
6. நாட்டின் தொழில் நிலையை அளவிடும் கருவியாகப் பங்கு மாற்றகங்கள் செயல்படுகின்றன. பல்வேறு பத்திரங்களின் விலை ஏற்ற இறக்கங்களின் மூலமாக நாட்டின் பொருளாதாரப் போக்கினை அவைகள் பிரதிபலிக்கின்றன.